லயன் காமிக்ஸ்

# கானகத்தில் ஒரு கைதி!



டியர் ரீடர்ஸ்,

# ரூ.5000 பரிசு!

## புது வாசகர்கள் கவனத்திற்கு!

பிப்ரவரி 1990 முதல் ஆரம்பித்துள்ள போட்டி இது. லயன் வெளியீடு நிர். **67** ஆன **"எமனுக்கு எமன்"** எனும் இதழோடு ஒரு இலவச ஆல்பம் வழங்கப் பட்டது.

தொடர்ந்து வந்த லயன் காமிக்ஸ் பின்னட்டைகளில் நமது கதாநாயகர்களின் துண்டுப் படம் அச்சிடப்பட்டிருந்தது. அவற்றை தவறாமல் வெட்டியெடுத்து ஆல்பத்தில் ஒட்டி வைத்தாக வேண்டும். ஆல்பம் பூர்த்தியடைந்த பின்னர் அதை எங்களுக்கு அனுப்பி வைத்தால் குலுக்கல் முறையில் **10**-அதிர்ஷ்டசாலிகளைத் தேர்ந்தெடுத்து தலா ரூ. **500**/- பரிசு வழங்கயிருக்கிறோம்.

ஆகையால் நீங்கள் புதிய வாசகராய் இருக்கும் பட்சத்தில் உடனே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்!'' ''எமனுக்கு எமன்'' மற்றும் அடுத்து வந்த இதழ்களை பெற்றுக் கொண்டு நீங்களும் போட்டியில (லேட்டாக இருந்தாலும்) கலந்து கொள்ளலாம்!

அன்புடன்.

எஸ். விஜயன்




கானகத்தில் ஒரு கைதி!
ஹாவ்ரே ஸ்டேஷனில் ஒரு மாலை வேளையில்-
போய் வா மை டியர் ஆல்பர்ட்! உன் நண்பர்களிடம் எங்களுடைய அன்பைத் தெரிவிக்க மறந்து விடாதே!
இம்முறையாவது விடுமுறையில் விஷமத்தனம் எதும் செய்யாமலிருக்க முயற்சி செய்!
மறக்காம சொல்றேன் டாடி!



சரி மம்மி! நீங்களும் உங்களுடைய உல்லாச கடற் பயணத்தின்போது ஜாக்கிரதையா இருங்க!
ஊ ஊ ஊ
சரி சரி உள்ளே போ- இரயில் நகருகிறது!
ராத்திரி படுக்குமுன் ஸ்வெட்டரை போட்டுக் கொள்ள மறந்து விடாதே. கடலோரப் பகுதியில் ஏகமா குளிரும்!
சரி, போய் வரேன் டாடி மம்மி- மூன்று வாரம் கழித்து மீண்டும் சந்திப்போம்!
ஓ.கே இனி, உட்கார ஒரு வசதியான இடம் பார்க்கணும்!



ஏகப்பட்ட கூட்டமா இருக்கு-அடுத்த பகுதியிலே போய்பார்க்கலாம்!
ஹாய்ய்-மூணு பேர்தான் இருக்கிறாங்க அப்பாடா-ஒரு வழியா நல்ல இடம் கிடைச்சுட்டுது!
ஸாரி தம்பி- இது 'ரிசர்வ்' பண்ணப்பட்ட பகுதி!
ஓ ஸாரி
பரவாயில்லே!
அந்த ஆள் கையிலே விலங்கு மாட்டியிருக்கு! கூட இருக்கிறவங்க போலீஸ்காரர்கள்னு நெனைக்கிறேன்!


ஏதாவது ஒரு இடம் வசதியா கிடைக்கிற வரை இங்கே இப்படி வராந்தாவிலேயே உட்கார்ந்துக்க வேண்டியதுதான்!
தன் பிரயாணப் பையின் மீது அமர்ந்து கொண்டான் ஆல்பர்ட்.
அந்த ஆள் என்ன குற்றம் செய்திருப்பான்! ஹூங் நான் ஏன் அதைப் பற்றி மண்டையை உடைச்சுக்கணும். சிந்திக்க வேறு விஷயமா இல்லே?
வண்டியோட வேகம் ஏன் குறைஞ்சிட்டுது? அதுக்குள்ளேயா அடுத்த ஸ்டேஷன் வந்திட்டுது?
இல்லே- கீழே ஆட்கள் மராமத்து வேலே பார்த்துக்கிட்டிருக்காங்க!


விடுமுறைக்கு உல்லாசப் பயணம் கிளம்பிட்டியாக்கும்!
ஆமாம் ஸார்! கடலோரப்பகுதியில் முகாமிட்டிருக்கிற என் நண்பர்-பர்களோட நானும் சேர்ந்துக்கப் போய்க்கிட்டிருக்கேன்!
அடடா-திறந்த வெளியில் வாழ்க்கை எவ்வளவு உல்-லாசமாக இருக்கும்.
வீ வீ வீ வீ


கடவுளே- அபாய எச்சரிக்கை சமிக்ஞை! இப்படி அலட்சியமாக நான் வெளியே வந்திருக்கக் கூடாது?
ஐயோ- பிரிடி என்ன நடந்தது?
அந்த அயோக்கிய ராஸ்கல் அதிரடியா என்னைத் தாக்-கிட்டு ஓடிட்டான்!
கையில் விலங்கோடு அவன் அதிக தூரம் போயிருக்க முடியாது!
சா-சாவி என் பையில் காணோம் என்னோட ரிவால்வரையும் எடுத்துக்கிட்டு ஓடிட்டான்!
ஓடி வா பிரிடி- அவனை எப்படியாவது விரட்டிப் பிடிச்சாகணும்- இல்லேன்னா-
தொலைஞ்சோம்! அந்த நேரம் பார்த்து நீ சிகரெட் பிடிக்க வெளியே போனது துரதிர்ஷ்டம்!


என்ன நடந்தது?
சங்கிலியை ஏன் இழுத்தாங்க?
நாங்கள் போலீஸார்-விலகி வழி விடுங்க!
இரயில்லேர்ந்து எவனாவது குதிச்சு ஓடினதைப் பார்த்தீங்களா?
ஆமா- ஆசாமி இந்தப் பக்கமா ஓடறான்!
அவனைப் பிடிச்சு நிறுத்தியிருக்கலாமே?
கேலி பண்றீங்களா? எங்க-ளுக்கு எப்படித் தெரியும்?
மற்றவங்களோட நீ அந்தப் பக்கமாகப் போய்த் தேடு. நான் இந்தப் பக்கமாகத் தேடறேன்!
சரி- வாங்க! எங்களுக்கு உதவி பண்-ணுங்க!


லீவிலே விஷமம் பண்ணாதேன்னு சொல்லியனுப்பிச்ச டாடியும் மம்மியும் இப்போது என்னைப் பார்த்தா- ஹா-ஹா- ஆரம்பமே அட்டகாசமா இருக்கு!
என்ன ஆச்சு?
அந்த அயோக்கியன் தப்பி விட்டான்!
ஓ.கே. கலவரமடையத் தேவையில்லை! எல்லோரும் அவரவர் ஸீட்டில் அமைதியாக உட்காருங்கள்- போங்கள்!
தப்பி ஓடினது யார் சார்?
மெர்ச் என்று ஒரு திருடன்- குற்றம் நடந்த இடத்தில் சம்பவத்தை மீண்டும் நடத்தி ஆராய அழைத்துப் போய்க் கொண்டிருந்தார்களாம்!
எப்படி தப்பிச்சான்?
தெரியலே!
என்ன ஒரு புதுமையான அனுபவம்! ஆண்ட்ருவும், ஆலனும் இப்போ இங்கே இருந்தாங்கன்னு என்ன செஞ்சிருப்பாங்கன்னு நல்லா தெரியும் எனக்கு!
அவங்களும் இரயிலிலிருந்து குதிச்சு திருடனை துரத்திக்கிட்டு ஓடியிருப்பாங்க. ஆனா நான் அப்படிச் செய்யப் போறதில்லே. டாடியும் மம்மியும் சொல்லியனுப்பிச்சதை நான் மறந்திடலே!


பணத்தைக் கொள்ளையடிச்சவன் அயோக்கியனாகத்தான் இருப்பான். அவன்கிட்டேர்ந்து தூர விலகி இருக்கிறதுதான் புத்திசாலித்தனம்!
உஷ்ஷ்! எதுவும் பேசாதே சைகை கூட செய்யக் கூடாது- ஜாக்கிரதை!
ஓ!
வ-வந்து!
முன்னால் நட!
ஏன்தான் எனக்கு இப்படி ஒரு சாபமோ- கடவுளே!
இன்ஸ்பெக்டர்- அங்கே பாருங்கள்!
ஆமாம்- அவனேதான்!



மொர்ச்! பிஸ்டலை கீழே எறிந்து விட்டு கைகளை உயர்த்து. நீ தப்பிக்கவே முடியாது!
இந்தப் பையனுக்கு விபரீதமாக எதுவும் நடந்து விடக் கூடாது என்று நீங்கள் விரும்பினால் கிட்டே நெருங்காதீர்கள். விலகியே நில்லுங்கள்!
பணிவதை தவிர வேறு வழியில்லை போலீஸாருக்கு.
வாடா பயலே. தப்பியோட நீ முயற்சிக்காதவரை உனக்கு எந்தத் தீங்கும் இழைக்க மாட்டேன்!
ஆல்பர்ட்டை கவசமாக முன்னால் வைத்துக் கொண்டு அங்கிருந்து விலகி நடந்த மொர்ச் காரிருளினுள் புகுந்தான்.
என் நண்பர்கள் இப்போது இங்கே இல்லாதது உன்னோட அதிர்ஷ்டம்.
எங்கே இருக்காங்க?
கடலோரப் பகுதியிலே! அதைப் பத்தி உனக்கென்ன?
வெரிகுட்-நட-போவோம்!


போலிஸ் முன்னேக்கி நகர முற்பட்டபோது-
சாமர்த்தியமாக எதையாவது செய்ய நினைக்காதீர்கள்! இல்லையேல் இந்தப் பையனுடைய உயிருக்கு நான் உத்தரவாதம் தர முடியாது!
ஆல்பர்ட்டை தள்ளிக் கொண்டு விரைந்தான் மெர்ச்.
50 மீட்டர் தொலைவு சென்றதும்-
நில்! நகராதே!
தப்பியோடுகிறான்-வா பிர்டி -விரட்டிப் பிடிக்கலாம்!


ஆனால்-அவர்களுடைய முயற்சி பல-
னளிக்கவில்லை. மெர்ச் காரிருளினுள்
கலந்து மறைந்தோடி விட்டான்-
சில நிமிடங்களுக்குப்பின்-
நீ இன்று தப்பிப் பிழைத்தது
ஆச்சரியமான விஷயம் தம்பி!
நன்றாகத்தானே இருக்கிறாய்?
கொஞ்சம் பதைபதைப்பு
அவ்வளவுதான்!
அப்புறம்?
எங்கோ பதுங்கிக்
கொண்டு விட்டான்
கார்டு இரயிலில் ஏறி
அமர்ந்தார்-
எல்லோரும் ஏறிக்கொள்
ளுங்கள்- இரயில் புறப்
பட்டுப் போகிறது!
அதன் பிறகு பயணத்தில் எந்த இடைஞ்சலும்
இல்லை. ஆல்பர்ட்டை வரவேற்க ஆலனும்,
ஆண்ட்ரூவும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்.
வாடா- ஒருவழியா
வந்து சேர்ந்துட்டியா?
இவன் எப்போதுமே
வேட் தான்!
எனக்கு வழியிலே ஏற்பட்ட
அனுபவத்தை கேட்டீங்கன்னா
நீங்க இப்படி பேசமாட்டீங்க!


வெளியிலே ஜீப் ரெடியா நிக்குது. வா- போகலாம்!
சரி- ஜீப்பிலே போகும் போது பேசிக்கலாம்!
நடந்ததை, தான் ஏதோ பெரிதாக சாதித்துவிட்ட மாதிரி உற்சாகமாக விவரித்தான் ஆல்பர்ட்.
கடுவன் பூனை மாதிரி முஞ்சியை உர்ருனு வச்சுக்கிட்டு அவன் சொன்னான்: 'ஒரு அடி எடுத்து வச்சியோ நீ பொணமாயிடுவே!' ஆனா நான் ஒண்ணும் பயந்து போயிடலே. 'நான் ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டேன்'னு பதில் சொன்னேன். கடேசீலே அவன் ஆளே! விட்டா போறும்னு ஓடிப்போயிட்டான்
ஜமாய்ச்சுட்டேடா! ஹீரோவாயிட்டன்னு சொல்லு!
பின்னே? நான் ஹீரோதாண்டா?
பின்னர்
இன்னமும் உன் படபடப்பு அடங்கலேன்னு நெனைக்கிறேன். நடந்ததை மறந்தட்டு சூப்பை ருசித்து சாப்பிடுடா ஆல்பர்ட்!
சூப் எப்படிடா இருக்கு. இன்னும் கொஞ்சம் ஊத்தட்டுமா?




இரவு நன்ருக தூங்கி ஓய்வெடுத்துக் கொண்டபின் அந்த மூன்று நண்பர்களும் அருகில் இருந்த ஒரு துறைமுகத்திற்குச் சென்ருர்கள்-
டேய்- ஆண்ட்ரூ, வண்டியை நிறுத்துடா! ஓடிப் போய் ஒரு நியூஸ் பேப்பர் வாங்கிட்டு வந்திடறேன்!
சீக்கிரமா வந்துசேர்-
TABAC
அடக்கடவுளே! அவன் பிறகு அகப்படவே யில்லையாம்!
தினசரி
கைதி தப்பி ஓட்டம்!
நேற்றிரவு சமீபத்தில் கைதான கொள்ளைக்காரன் மெர்ச் போலீஸாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு தப்பியோடிப் போனான். துரத்தி வந்த போலீஸாரிடமிருந்து தப்ப அவன் ஒரு சிறுவனை கவசமாக வைத்துக் கொண்டதாக-
டேய்- உன்னைப் பத்தி போட்டிருக்குடா! சீக்கிரமே நீ பிரபலமடையப் போகிருய். மேலே கேள்: ''நெருங்கி வந்தால் அந்தச் சிறுவனைக் கொன்று விடுவதாக மிரட்டி போலீஸாரை தூரத்தில் நிறுத்திவைத்த அந்தக் கயவன் மெள்ள பின்னுக்கு நகர்ந்து இருளில் மறைந்து விட்டான்! அவனைத் தேடிப் பிடிக்கும் முயற்சி இன்னமும் பலனளிக்க வில்லை!''
SPORTS


வெளி நபரின் ஒத்தாசை இருந்திருக்கும் என்பது போலீஸாரின் கணிப்பு. தப்பியோட முன்கூட்டியே மொச் திட்டமிட்டிருந்ததாக யூகிக்க இடம் அளிக்கிறது. கிடங்கில் கொள்ளை நடந்த போது வாட்ச்மேனைக் கொலை செய்த நபர்கள் இருவர் என்று ஏற்கனவே எழுதியிருந்தோம். அந்த
இரண்டாவது நபர்தான் சற்சமயம் மொச் தப்பி ஓட வகை செய்திருக்கக்கூடும்!
கொள்ளை பற்றி அவ்வளவுதான் எழுதியிருக்கா?
ஆமா- ஏற்கனவே பேப்பர்லே வந்த செய்தியின்படி மொச்சும் அவனுடைய சகா ஒருத்தனும் நள்ளிரவில் கிடங்கு ஒன்றை கொள்ளையடிக்க போயிருக்காங்க. வாட்ச்மேன் தடுத்திருக்கான். அவனை அடிச்சிக் கொன்னுட்டானுக!
நான் சொன்னேனில்லையா? அவன் பயங்கரமான ஆசாமின்னு
அழுத்தமான ஆளாத்தான் இருக்கணும். எப்படி அப்பல்லாம் அடிச்சுக் கேட்டும் தன் சகாவைப் பற்றி எதையுமே சொல்லலையே


அதனாலே சாட்சிகளோட பலத்தை வச்சு கேஸை நடத்த போலீஸ் தீர்மானிச்சு, குற்றம் நடந்த இடத்துக்கு மொர்ச்சைக் கூட்டிக்கிட்டு போறப்பதான் பயல் தப்பி ஓடிவிட்டான்!
சரி- நமக்கெதற்கு அந்த விவகாரம்?


ஆல்பர்ட் தப்பிச்சுது தெய்வாதீனமானது!
ஒத்துக்க மாட்டானே-தன்னோட திறமைதான்னு பீற்றிக்குவான்!


அன்றைய பகல் பொழுது உல்லாசமாக கழிந்தது. இருள் கவிழ்ந்த பின்னர்-
ஒரேயடியா போரடிக்குது-தூங்கும் அழகிக்கு போட்டியா நீண்ட தூக்கம் போட்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கப் போறேன்!
இதை முதியோர் ஓய்வு விடுதின்னு நெனைச்சியா- நாங்க ஒரு பிளான் போட்டிருக்கோம்!


பிளானா?
ஆமாம்- ஒருவகை கண்ணாமூச்சி ஆட்டம். விபரமா சொல்றேன்- கேட்டுக்கோ!
திருவுளச் சீட்டு போட்டு தீர்மானம் செய்யப்பட்டதற்கு இணங்க ஆலன் முதலில் கிளம்பினான்-
நூறு எண்ணி முடிந்ததும் மற்ற இருவரும் அவரவர் இஷ்டப் பட்ட திசையில் முன்னேறலாயினர்
பிறர் கண்ணில் படாமல் யாரொருவர் கோடீல சென்றடைகிறார்களோ- அவர்களே வெற்றி பெற்றவர்கள்-புரிஞ்சுதா?
ம்ம்-! கிளம்புவோமா!



அங்கிருந்து பல மீட்டர் தொலைவில் கையிலிருந்த டார்ச்சை எரிய விட்டும், அனைத்தும் அடையாளம் காட்டிக் கொண்டு நின்றான் ஆலன்.
அதோ தெரிகிறது டார்ச் வெளிச்சம்!
இலக்கை நோக்கி விரைந்தான் ஆல்பர்ட்.
ஆண்ட்ருவை முந்திக்கொண்டு சென்று இலக்கை அடைந்து நான் வெற்றி பெற்றால் பயலின் வாய்ச் சவடால் கொஞ்சமாவது குறையும்!
சில நிமிடங்களுக்குப் பின்-
ஆச்சரியமா இருக்கே- டார்ச் வெளிச்சத்தைக் காணோம்! பாதை தவறி விட்டேனா என்ன?


சே- இதிலும் ஆண்ட்ருதான் வெற்றி பெற்று விடுவான் போலிருக்கே!
இப்படி நான் சட்டென்று மனச் சோர்வடைந்திருக்கக் கூடாது. அதோ! மீண்டும் தெரிகிறது டார்ச் வெளிச்சம். அடேய்- ஆல்பர்ட்- நீ பெரிய கில்லாடிடா! என்ன- மாய் ஏறி ஓடறே!
நெருங்கிவிட்டேன்-ஓசைப்படாமல் போய் ஆலனை தொட்டுவிட வேண்டும்-
இதோ-நான் வெற்றி பெறப் போகிறேன். ஆலன் ஆச்சரி யத்தில் வாயைப் பிளக்கப் போகிறான்.
ஓ-!
ஓ-! இங்கே- நீ-எப்படி-
மொர்ச்-!


அப்படி உட்கார்- வாயைத் திறக்கக் கூடாது- புரிஞ்சுதா? உன் நண்பர்களைக் கூவி அழைக்க முயற்சிக்காதே!
நீ எப்படி தப்பிச்சே போலீஸ் கிட்டேர்ந்து?
அவசியம் தெரிஞ்சுக்கணுமோ- சொல்றேன் கேட்டுக்கோ- அங்கே என் தோஸ்த் ஒருவன் காரை தயாரா நிறுத்தி வச்சு காத்துக்கிட்டிருந்தான்!
அப்போ-நியூஸ் பேப்பர்லே போட்டிருந்த யூகம் கரெக்ட்! உனக்கு ஒரு சகா இருக்கான்!
சகா-? இல்லே-நெருங்கிய நண்பன்! ஆனால் அவனை நான் இந்த விவகாரத்தில் இழுக்க விரும்பவில்லே. அதனால்தான் பதுங்கிக்கொள்ள வேறோரிடம் தேடி இங்கே வந்தேன்!


டார்ச் வெளிச்சத்தை காட்டினியே ஏன்? எங்களை ஏமாற்றி உன் வலையில் விழ வைக்கவா?
இல்லை! என் கூட்டாளி ஒருவனுக்கு நான் காட்டிய இரகசிய சமிக்ஞை அது!
அதே சமயம்-
ஆலன் வந்துட்டேன்- நான்தான் ஜெயிச்சேன்!
எட்டு நிமிடம்-பதினோரு செகண்டுகள்- மோசமில்லை ஆண்ட்ரு!
ஆல்பர்ட் பாவம்-எல்லாத்திலேயும் அவன் லேட்தான்!



அங்கே-
ஐயோ- மறுப்டியும் கொலைகாரப் பயல் கிட்டே வந்து மாட்டிக்கிட்டேனே!
அதோ வந்துட்டான்!
வின்சென்ட்- வா! வா!
தாமதமாயிடுச்சில்லே? ஸாரிப்பா! போலீஸ் நடமாட்டம் இருந்ததினாலே! அது சரி- பொடியன் யார்?
நேற்று என்கிட்டே சிக்கின அதே பயல்தான். தற்செயலாக மறுபடியும் என்கிட்டே வந்து சேர்ந்திருக்கான்!
ஐயோ- எனக்கு இப்போ ஜாதகம் சரியில்லைனு தோணுது!


தவழ்ந்துக்கிட்டே வர்றதுன்னாலும் இன்னேரம் வந்து சேர்ந்திருக்கணுமே- எங்கே தொலைஞ்சான்?
'மனித நத்தை'ன்னு பட்டம் கொடுத்திருவோமா?
மெர்ச்- போலீஸ் நடமாட்டம் அதிகமா இருக்கு. இன்னிக்கு ராத்திரி நீ எங்கேயும் தப்பிச் செல்ல முடியாது. இங்கேயேதான் எங்கேயாவது ஓரிடத்தில் ஒருசில நாட்களுக்கு நீ பதுங்கிக் கிடக்கணும்!
சரி- ஆளு தங்க இங்கே ஏது இடம்? அத்தோட இந்தப் பையன் வேறு! இவனை என்ன செய்யலாம்?
பயல் நம்ம ரெண்டு பேரையும் பார்த்திட்டான்- எனக்கு ஒரு ஐடியா தோணுது!
என்ன- சொல்?


எப்படியும் இவன் உனக்கு எதிராத்தான் சாட்சி சொல்வான்- தப்பிக்க இது ஒன்று தான் வழி!
எழுந்து வாடா- போவோம்!
எங்கே தொலைஞ்சானோ தெரியலியே-
எனக்கு என்னமோ உதறல் எடுக்குதுடா- வா போய் தேடிப் பார்ப்போம்!



அவ்விரு நண்பர்களும் ஒரு மணி நேரம் எங்கெல்லாமோ அலைந்து தேடி அலுத்து விட்டனர்.
ஒருவேளை முகாமுக்கு திரும்பியிருப்பானோ? ஐயோ- அங்கேயும் அவன் இலலேன்னு- நினைக்கும் போதே பகீர் என்கிறது!
சில நிமிடங்களுக்குப் பின்-
முகாமில் விளக்கு வெளிச்சம் இல்லே! ஆல்பர்ட் அங்கேயும் இல்லே!
ஆஹ ஏதோ சலசலப்பு கேட்குதே- கவனி!
கைகளை உயர்த்தியவாறு மெள்ள நடந்து வாருங்கள்!
??


ஜாக்கிரதை! இந்த ஆள் தான் மெர்ச்! இவரும் இவரோட சகாவும் என்னை பலவந்தப்படுத்தி இங்கே கூட்டி வரச் செய்துட்டாங்க!
உங்களுக்கு என்ன வேணும்?
உங்களோட சில நாட்களுக்கு தங்கப் போறேன்!
என் நண்பன் நகருக்கு திரும்பி போயிருக்கான். அங்கே எனக்கொரு புகலிடம் ஏற்பாடு செய்வான். அதுவரை இங்கே பதுங்கிக் கிடக்கப் போறேன். இங்கே என்னைத் தேட யாருக்குமே தோணாது!
இதுக்கு நாங்க சம்மதிப்போம்னு நம்பறீங்களா?


துப்பாக்கிக்கும் அஞ்சாமல் குபீரென்று பாய்ந்தான் ஆண்டரு.
ஆலன்! சீக்கிரம்!
நில்! இல்லையேல் சுட்டு விடுவேன்!
ஆண்டரு! நில்!
நான் இங்கே பதுங்கிக் கிடக்க நீங்க வசதி பண்ணித் தராவிடில் உங்க உயிருக்கு உத்தரவாதம் கிடையாது- ஜாக்கிரதை!
நாங்க இங்கே இருக்கிற விஷயம் நகரத்திலே இருக்கிறவங்களுக்குத் தெரியும். எங்களுக்கு விபரீதமா ஏதாவது நிகழ்ந்ததுன்னு அவங்க உங்களை சும்மா விடமாட்டாங்க!


வழக்கம் போல நீங்க நகருக்குள்ளே போய் வரலாம். ஆல்பர்ட்டைப் பிணையா வச்சிருப்பேன்! நீங்க அங்கே வாயைத் திறக்காம சமர்த்தா திரும்பி வந்து சேரணும்!
ஆல்பர்ட்டை காணோ-முன்னு அவங்களுக்கு சந்தேகம் வந்தா?
வாஸ்தவம்தான்! ஆளு ஒருத்தர் மாற்றி ஒருத்தர் பிணைக்கைதியா எங்-கிட்ட இருக்க, மற்ற இருவரும் போய் வந்தால் இந்த சங்கடம் வராது!
ஆத்திரமும், கோபமும் குமுறிக் கொண்டு வந்த போதிலும், வேறு உபாயம் எதுவும் தோன்றாததால் பையன்கள் அந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொண்டனர்.
ஒத்துப்பீங்கன்னு எனக்குத் தெரியும்! ஆல்ரைட் போய் நிம்மதியா தூங்குங்க. எனக்கு தூக்கம் வரலே!



பொழுது நகர்ந்தது. ஆனால் நண்பர்களுக்கோ பொட்டுத் தூக்கமில்லை. சில மணி நேரம் கழித்து-
அந்த ஆள் தூங்கியிருப்பான். அதிரடியா ஏதாவது செய்வோம். வாங்க!
என்னப்பா ஆண்ட்ரு. தூக்கம் வரலியா? கவலைப்படாதே. நான் தூங்காம காவல் இருக்கேன். போய் நிம்மதியாகத் தூங்கு!
மறுநாள் காலை-
எனக்கு பேப்பரும், சிகரெட்டும் வேணும். ஆண்ட்ரு இங்கே இருக்கட்டும். மற்ற இரண்டு பேரும் நகரத்திற்குப் போய் வாங்கிட்டு வாங்க!
ஒரு மணி நேரத்திலே திரும்பிடணும். அங்கே யார்கிட்டயாவது விஷமமா ஏதாவது உளறினீங்கன்னு- ஜாக்கிரதை!



என்னடா இது இப்படியொரு கஷ்டம் நமக்கு! என்ன செய்யலாம்கிறே?
இப்போதைக்கு அவன் சொல்றபடி நடக்கிறதுதான் புத்திசாலித்தனம்!
நாம யார்கிட்டேயாவது விஷயத்தை வெளியிட்டால் ஆண்ட்ருவின் உயிருக்கு ஆபத்தாகி விடலாம்!
ஆமாண்டா!
வாங்க வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு அவர்களிருவரும் ஜீப்புக்குத் திரும்பிய போது-
ஹேய்!


அட- நம்ம 'ஸ்கவுட்' பையனல்லவா? என்-னப்பா படபடப்பெல்லாம் அடங்கிப் போச்சா?
ஆ-ஆமாம்! தாங்க்யூ இன்ஸ்பெக்டர்! இவன் என்னோட பிரண்டு ஆலன்!
இவர் மிஸ்டர் மாலோன்-மொர்ச் கொள்ளையடிச்ச கிடங்கின் உரிமையாளரின் மகன். இவர் மிஸ்டர் ஜான்ஸன்! அங்கே வேலை பார்க்கிறார்!
பேப்பர்லே போட்டிருந்தது படிச்சோம்!
அப்படின்னா மொர்ச் தப்பியோடிட்டான்கிறதும் உங்களுக்குத் தெரிஞ்-சுருக்குமே! அவனைப் பிடிச்சுக் கொடுக்கிறவங்களுக்கு நல்ல வெகுமதி கிடைக்கும்னு அறிவிச்சிருக்கோம்!
கொலை செய்யவும் தயங்காத கிராதகன்! வாட்ச்மேனை மிருகத்தனமா அடிச்சி கொன்னுபோட்டிருக்கான்!
அவன் மறுபடியும் கண்ணில் பட்டான்னா ரொம்ப ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள் இன்ஸ்பெக்டர். தான் தப்பியோட எத்தனை கொலைகள் வேண்டுமானாலும் செய்யக் கூடியவன்!



மிஸ்டர் மாலோன்- மெர்ச் உங்ககிட்டே நீண்ட காலமா வேலையில் இருந்தானே?
ஒரு வருஷம் இருந்தான். எனக்கு ஆரம்பத்திலிருந்தே அவனைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது. அப்பாகிட்டே சொன்னேன். அவர் அதைக் காதிலே போட்டுக்கவே இல்லே!
ஆமாம்- அவனோட டைபயிலேர்ந்து கெடைசச ஆதாரங்கள் மட்டும் நமக்கு தெரிய வரலேன்னு அவன் மீது குற்றம் சாட்ட தடயமே இல்லாம போயிருக்கும்!
ஐயோ!
இப்போ மணி என்ன இன்ஸ்பெக்டர்?
ம்ம்- ஒன்ருகப் போகிறது! ஏன்?
நாங்க அவசரமா போகணும்- எங்க பிரண்ட் ஆண்ட்ரு எங்களுக்காகக் காத்துக்கிட்டிருப்பான். ஸாரி ஸார்- நாங்க கிளம்பறோம்!




சாஸ்கல மட்டும் ஆண்ட்ரு
கைவச்சிருந்தான்னா நான்
சும்மா விடப்போறதில்லை!
தடக் தடக் என்ற
கொள்ள அவர்கள் முகாமை
ஆண்ட்ருவுக்கு என்ன
சோ - ஆண்டவனே -
துப்பாக்கி முழக்கம்!
ஓடி வா! அங்கே போய்
பார்ப்போம்!


ல-2




ஏ- நீங்க ரெண்டு பேரும் ஒருவழியா வந்து சேர்ந்துட்டீங்களா? பொழுது


உங்க மூஞ்சி ஏன் இப்படி வெளிறிப் போயிருக்கு?
சரி சரி, நடங்க- எனக்கு ஏகமா பசிக்குது!


நீங்க ரெண்டு பேரும் போய் சமையல் செய்ய தண்ணீரும், விறகும் எடுத்துட்டு வாங்க- ஆல்பர்ட் அடுத்து நீ என்கூடவே இரு- புரிஞ்சுதா?
சும்மா மிரட்டாதே! உங்கிட்டே துப்பாக்கி இருக்கலாம்! ஆனா நாங்க மூணு பேர் இருக்கோம்!
டேய் ஆண்ட்ரூ முட்டாள் தனமாகப் பேசாதே- உனக்குத் தெரியாது!
சரியா சொன்னே! என் வெறியைக் கிளப்பாதீங்க- ஆமா- சொல்லிப்புட்டேன்!
நம்மாலே எதுவுமே செய்ய முடியாதுன்னு நினைக்கிறான் அந்த மடையன். இருட்டட்டும்- பிறகு வச்சுக்குவோம்!
நேத்து ராத்திரி முழுக்க அவன் தூங்கலே. ஆனா தூக்கக் கலக்கம் கொஞ்சம் கூட மூஞ்சியிலே தெரியலே. இன்னிக்கும் அவன் தூங்குவான்னு தோணலே, ஆனா கிடைக்கிற முதல் வாய்ப்பை நாம பயன்படுத்திக்கணும்!



சாப்பிட்டானதும்-
ஆகா- சாப்பாடு படு பிரமாதம்! நல்லா சமைக்கறீங்க-
நான் ஓய்வெடுத்துக்கப்போறேன்- ஆனாலும் உங்க மேலே ஒரு கண் வச்சிருப்பேன்!
ம்ம்-ம்-முடிஞ்ச மாதிரி தான்!



ஹாய்ய்-எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டான்!
இப்போ-இந்த துப்பாக்கிஎன்னோடது!
மெர்ச்- வா வெளியே! கைகளை உயர்த்து! உன்னை சுட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தாதே!


அலட்டிக்காதே தம்பி- அதில் தோட்டா கிடையாது!
ஆண்ட்ரு- ஏமாந்திடாதே! பொய் சொல்றான்!
கிட்டே வராதே- உன் பாச்சா பலிக்காது!
தோட்டா வேணுமா. இதோ பார்!
ஏன்? அவற்றை அகற்றி வச்சிருக்கே-
விபரீதமா ஏதாவது நிகழ்ந்து விடக்கூடா தென்னுதான்- ஆனா- ரொம்ப கஷ்டமா இருக்குதில்லே?



போலீஸ் யோசிச்சிக்கிட்டிருக்கிற மாதிரி நான் குற்றவாளி இல்லே! நான் நிரபராதி. ஆனா சாட்சியங்களும் தடயங்களும் எனக்கெதிரா இருக்கு. அதனாலேதான் திரிஞ்சு அலையறேன்!
நீல் விடாதே. நம்பமாட்டோம்
ஸாரி! தப்புத்தான்! ஆனா என்னை நீங்க புரிஞ்சிக்கவே முடியாது! போலீஸ் விரட்டி வரும்போது யாருக்குமே நிதானம் தவறிவிடத்தான் செய்யும்!
ஆனா உங்ககிட்டேர்ந்து போலீஸார் கைப்பற்றிய கரன்சிகள்?
சுலபமா சொல்லிட்டீங்க!
உண்மையான குற்றவாளி அதை என் பையிலே போட்டு வச்சிருக்கணும்!


ஆனா நிரூபிக்கிறது கஷ்டம்! அதனாலேதான் என் பேச்சை யாருமே நம்பமாட்டேங்கிறாங்க!
உண்மையான குற்றவாளி யார்?
தெரியலை! மாலோனிடம் வேலை பார்க்கும் எனது நண்பனான வின்சென்ட் நான் நிரபராதின்னு நிரூபிக்க ஆனமட்டும் முயற்சி பண்றான். ஆனா இன்னமும் அவனுக்கு வெற்றி கிட்டவில்லை!
சரி- உண்மையை அப்படியே உங்ககிட்டே சொல்லிட்டேன். நீங்கள் என்னைக் காட்டிக் கொடுக்கப் போறீங்களா?



மெர்ச்சின் வார்த்தைகளில் தொனித்த சத்தியத்தின் சாயல் அவர்களைச் சிந்திக்க வைத்தது.
என்னடா செய்யலாம்?
இவரை இப்படியே விட்டுவிட முடியாது!
வின்செண்ட்டை முதல்லே விசாரிக்கணும்!
சரி! உங்களை தற்காலிகமா எங்களோட வச்சிக்கிறோம்-ஆலன் உங்களுக்கு காவல் இருப்பான்!
தப்பியோட நான் முயற்சிக்கவே மாட்டேன்-இது சத்தியம்!
இன்னிக்கு சாயந்திரம் நானும் ஆல்பர்ட்டும், போய் வின்செண்ட்டை சந்திச்சு, கலந்துபேசி உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க ஒத்தாசை செய்யலாம்னு இருக்கோம்!
நன்றி-என் சமர்த்துக் குட்டிகளா!


சில மணி நேரம் கழித்து:
கதவு திறந்திருக்கு! நிச்சயம் அவன் உள்ளே தான் இருப்பான்!
உதவி! உதவி!
ஓடி வா- யாரையோ அடிக்கிறாங்க!
ஜாக்கிரதை! நம்மைப் பிடிக்க இது ஒரு சூழ்ச்சியாகவும் இருக்கலாம்!


ஓ-வின்சென்ட்! யாரோ செமர்த்தியா அடிச்சிருக்காங்க
அடிச்சவன் எங்கேயும் ஓடிப் போயிருக்க முடியாது- இங்கேதான் எங்கேயாவது ஒளிஞ்சிண்டிருப்பான்-
ஆல்பர்ட்! நீ இவருக்கு மயக்கம் தெளிவிக்க முயற்சி செய்- அப்படியே நுழைவாசல் மீது ஒரு கண் வைத்திரு...


ஆண்ட்ரு-
ஜாக்கிரதை!
டமால்!


எதிரி மேஜை மீதிருந்த கத்தியை எடுத்து
ஆண்ட்ருவை குறிவைத்து
நல்லவேளை!


வெஸ்டிங் வயர்! இனி பயலை
சுலபமா சமாளிச்சுடலாம்!
ஓ-நோ!
பிரகாசமான ஒளியினால்
க்காடிப் போனான்


ஏய்- நில்- நில்- உன்னை-
ஆல்பர்ட் விடாதே- அமுக்கு அவனை!
குட்டிச் சாத்தானே- வழியை விடு!


ஓடிட்டான்! நாம ஜீப்பிலே வந்-ருந்தா துரத்திப் பிடித்திருக்கலாம். ஹூம்ம்!
ஹா- வின்சென்டுடைய கவனிப்-போம்- போலீஸுக்கும் தகவல் கொடுக்கணும்!
சில நிமிடங்களுக்குப் பின்-
ம்ம்- இவனோட நிலைமை படுமோசமா இருக்கு- இவனை நாம உடனடியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும் இன்ஸ்பெக்டர்!
நானும் சீக்கிரமே அங்கே வந்து சேர்றேன்!


உங்களுக்கு அவ்வளவா அதிர்ஷ்டம் இல்லேன்னு தெரியுது.நீங்க போற இடமெல்லாம் ஏதாவது பிரச்னை வந்து சேர்ந்திடுது-இல்லேயா?
நாங்க தற்செயலா இந்த வழியா போயிட்டிருந்தோம் இன்ஸ்பெக்டர்-யாரோ உதவின்னு கத்தற சப்தம் கேட்டு உள்ளே நுழைஞ்சோம்!
நீங்க பிடிக்கமுடியாம போனது துரதிர்ஷ்டம்-இந்த விஷமத்தை செஞ்சது நிச்சயம் அவனாகத்தானிருக்கும்!
இருக்கவே இருக்காது-அவன் ஏன் இதை செய்யணும்?
புரியலே? வின்சென்ட் அவனோட கூட்டாளி. அவன் போலீஸ்கிட்டே உளறிடக் கூடாதேன்னு தீர்த்துக்கட்ட முயற்சித்திருக்கலாமில்லேயா?
வின்சென்ட் பிழைச்சுக்கிட்டா நிஜம் என்னன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்!


எங்களுக்கு இனி இங்கே என்ன வேலை? நாங்க புறப்படறோம் இன்ஸ்பெக்டர்!
கிளம்புங்க- உங்களோட தைரியத்தை மெச்சுகிறேன்!
சற்று நேரம் கழித்து-
இந்தச் சம்பவம், மொர்ச் அப்பாவியோ என்று எண்ண வைக்கிறது
கொள்ளைபற்றிய உண்மை வின்செண்டுக்கு தெரிந்திருக்கலாம். அவனுடைய வாயை அடைக்க இந்தக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்!
முகாமுக்குத் திரும்பி வந்த தோழர்கள் இருவரும் நடந்ததை மொர்ச்சிடம் விவரித்தனர்.
ஐயோ! என்னால் வின்செண்ட்டின் உயிருக்கே ஆபத்து வந்து விட்டதா? அவன் மட்டும் செத்துப் போனால் எனக்கு மன்னிப்பே கிடையாது!
என்ன செய்யப் போறீங்க?


சரணடையப் போகிறேன்! இல்லேன்னு நான் கோழைன்னு ஆயிடும்! காலம் கடந்து விடுமுன் நான் வின்செண்ட்டைப் பார்க்கணும்!
நல்ல முடிவு நானும் உங்க கூட வரேன்!
சில நிமிடங்களுக்குப் பின்-
இன்ஸ்பெக்டர் டேவிட்டையா பார்க்கணும்? ஸ்டெல்லா மோரீஸ் கிளினிக்கிலே இருக்கார். அவசரமாக பார்க்கணும்னு அங்கே போங்க!
பிறகு கிளினிக்கில்-
யாரது- மொர்ச்சா?
இன்ஸ்பெக்டர்- ஜாக்கிரதை! பயலிடம் துப்பாக்கி இருக்கலாம்!
இதோ இருக்கிறது அவருடைய ரிவால்வர்! சரணடைய வந்திருக்கிறார் இங்கே!



இவனை எங்கே மடக்கிப் பிடிச்சீங்க?
எங்க முகாமிலே வலுக்கட்டாயமா வந்து தங்கினாரு. தன் மீது அபாண்டமாக பழி சுமத்தப்பட்டிருக்கிறதாகவும் தான் அப்பாவி என்றும் சத்தியம் பண்ணுரா!
எல்லா குற்றவாளிகளும் பண்ற சத்தியம்தான் இது!
ஆமா! இவன் கதை விடறான்! அப்படின்னு எதுக்காக தன் சகாவை கொல்ல முயன்றானாம்?
வின்சென்ட் இப்போ எங்கே இருக்கான்? அவனை உடனே
புரிகிறது! அவன் செத்து விட்டால் உனக்கு மரண தண்டனை வரை கிடைக்கலாம். ஆனால் உன் அதிர்ஷ்டம் அவன் காப்பாற்றப்பட்டு விட்டான்!
ஆகா- அப்படியா ஆண்டவனே நன்றி!



ஓனர் மைக்கேல், அவருடைய மகன் மாலோன் இருவர் முன்னிலையிலும் அவனை விசாரிக்க நினைத்தேன். ஆனால் அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான். நாளை அவனை விசாரிப்போம். அதுவரை நீ கிடங்கிலேயே இன்றிரவை கழி மொர்ச்!
ஓ.கே. சார்! வின்செண்ட் பிழைத்துக் கொண்டானே—அது ஒன்றே போதும் எனக்கு!
ஜான்ஸனும், மாலோனும் விடைபெற்றுக் கொண்டு அகன்றதும்-
பசங்களா- நாளை விசாரணை நடக்கப் போகிறது. உங்களிடமிருந்தும் சில தகவல்கள் வேண்டியிருக்கிறது!
அவசியம் வந்து சேருகிறோம் இன்ஸ்பெக்டர்!
மொர்ச்-நாங்கள் கிளம்புகிறோம்!
சற்று நேரம் கழித்து-
மொர்ச் நிரபராதி என்றால்-
அவருடைய பாக்கட்டினுள் திருட்டு க்ரனஸிகளை யார் போட்டிருப்பார்கள்? அங்கே அருகே இருந்த யாரோ தான் விஷமத்தை செஞ்சிருக்கணும். அவனோட முகமூடியை நாம கிழிக்கணும்!
ஹூம்ம்-!


அவர்களின் நடவடிக்கைகளை ஒரு உருவம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது-
இந்தக் குட்டிச் சாத்தான்களின் தொல்லை வர வர எல்லை மீறு-கிறது. இருக்கட்டும். கவனிக்-கிறேன்!
இரவு நெடுநேரம் வரை நண்பர்கள் அந்த விவகாரம் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.
ரொம்ப நேரமாச்சுடா- மிச்சத்தை நாளை
ஆமா- எனக்கும் தூக்கம் வருது!
அவர்கள் ஆழ்ந்த நித்திரை வயப்பட்ட சற்றைக்கெல்லாம்-
வந்த காரியம் முடிஞ்சுது!



சில நிமிடங்களுக்குப் பின்-
ஏய்- என்ன ஆச்சு?
வெளியே நடமாட்டம் கேட்டது- சட்-டென்ன மாட்டிக்கிட்டு கிளம்பு!
அதோ- எவனோ ஓடறான் பாக்!
ஏறு ஜீப்பிலே- பார்த்துவோம்!


நல்லா இறுக்கிப் பிடிச்சுக்கோ! வேகப் பரந்-
தயம் ஒண்ணு நடக்கப் போகுது இப்போ!
சில நிமிடங்களுக்குப் பின்.
கோட்டையை நோக்கி
இறங்குகிறான்!
விரட்டிப் பிடிச்சிட
முடியும்னு தோணுது!
ஐயோ!
ஏன்- என்னடா ஆச்சு?


பிரேக் சரியா
வேலை செய்யலே!


ஜீப்பை கட்டுப்-
படுத்த முடியலே!



ஹா-ஹா-ஹா- பிரேக் போச்சா!
இனி உங்களை ஆண்டவனால்
கூட காப்பாற்ற முடியாதுடா
பசங்களா!


ஐயோ-
ஜாக்கிரதை!


வேகத்தை மட்டுப் படுத்துடா ஆண்ட்ரு-ஐயோ-சீக்கிரம்!
முயற்சி பண்றேன்!
ஒரு வழியாக வேகத்தை மட்டுப்படுத்தி விட்டான் ஆண்ட்ரு-
கிறீச்!
கடைசி தருணத்தில்-
வீவீவீவீ
ஓ பிழைச்சோம்டா சாமி!
மயிரிழையில் தப்பிச்சிட்டோம்!


சே-தப்பிச்சுக்கிட்டான்களே!
ஆனாலும் நான் நிலைமையை சுலபமா சமாளிக்க முடியும்!
ஷிர்ர்ர்ர்
ஐயோ - நம் மீது மோத வர்றான்- ரிவர்ஸிலே விடு-சீக்கிரம்!


நெருங்கி வந்து விட்டான்-
பிரேக் சரியில்லாத நிலையில் அவனைத் துரத்திக்கிட்டுப் போறதிலே அர்த்தமில்லே. நம்ம அதிர்ஷ்டம் அவ்வளவு தான். முகாமுக்குத் திரும்புவோம்!
நல்ல சான்ஸ்-.. கெட்டுப் போச்சு


மறுநாள் காலை-போலீஸ் தலைமையகத்தில்
வின்செண்ட்டை கொலைப் பாத்தாங்க. அடுத்து எங்களை தாக்க முயற்சி பண்ணனுங்க இதெல்லாம் மெர்ச் நிரபராதிங்கிறதுக்கு நிரூபணங்கள்-இல்லையா இன்ஸ்பெக்டர்!
அவசியமில்லே! நான் வேறொரு கோணத்திலே பார்க்கிறேன்!
என் அனுமானம் என்னன்னு- கொள்ளையடிச்சது மெர்ச்சும், வின்செண்ட்-டும் சேர்ந்து. மூணாவது கூட்டாளி வெளியே யாராவது வர்றாங்களான்னு பார்க்க இருந்திருக்கலாம். அந்த மூணாவது ஆள் மொத்த தேட்டையையும் தனக்கே சொந்தமாக்கிக்கிட்டிருக்கலாம்!
மெர்ச் மீது சுமத்த அவனோட பையிலே திருட்டு நோட்டுக்களை வைச்சிருக்கான். பிறகு வின்செண்ட்டை தீர்த்துக்கட்ட முயற்சி பண்ணி-யிருக்கான். அந்த மூணாவது ஆளை கையும் களவுமா பிடிச்சாத்தான் இந்த வழக்கு ஒரு முடிவுக்கு வரும்!


இன்ஸ்பெக்டரோடு அனுமானத்தைப் பற்றி நீ என்ன நெனைக்கிறே ஆண்ட்ரு?
அது சரியா இருக்கலாம்-ஆனா-எனக்கு ம்ம் அதாவது-குற்றவாளி யாருன்னு எனக்குத் தெரியும்!
நாம இரண்டு குழுக்களா பிரிந்து ஆராய்ச்சியை தொடருவோம். எப்படின்னு விளக்கமாக சொல்றேன்- கேட்டுக் கொள்ளுங்கள்!
காயமுற்ற வின்செண்ட் தங்கியிருந்த க்ளினிக் அருகே-
ஹேய்!


தினசரி
மெர்ச் வழக்கில் திடீர் திருப்பம்!
யார் அந்த மூன்றாவது கூட்டாளி?
இன்று பிற்பகல் வின்சென்ட்டை இன்ஸ்பெக்டர் விசாரிக்கும் போது அந்த மூன்றாவது கூட்டாளி யார் என்ற உண்மை வெளிவரக் கூடும்!
நேற்று கிடங்கில் வின்சென்ட் என்னை அடையாளம் கண்டு கொண்டிருக்கக் கூடும்! ஆபத்து- அவன் வாயைத் திறக்கவே முடியாதவாறு பண்ணி-யாக வேண்டும்-அதுவும் உடனே!
அவனுடைய அறை ஜன்னல் திறந்துதானிருக்கிறது!
நேஷனல் ஸ்டோர் கட்டிடம் நேர் எதிரேயிருக்கிறது. மாலையில் ஊழியர்கள் வீட்டிற்கு கிளம்பியபின் உள்ளே நைஸாக புகுந்து கொண்டால் அங்கிருந்து வின்சென்ட்டை குறிவைப்பது சுலபம்!
நான் போய் முதலில் சில முன்னேற்பாடுகள் செய்யணும்!



இதுதான் என்னோட திட்டம்! ரெண்டுபோ மேலே எனக்கு சந்தேகம்! நீங்க ரெண்டுபேரும் ஜான்ஸனே கண்காணியுங்க-நான் மாலோனே கவனிச்சுக்கறேன்!
சரி - எப்போ ஆரம்பிக்கலாம்!
மாலோனும் ஜான்ஸனும் இப்போ கிடங்கிலே இருக்கக்கூடும். அவங்க வெளியேறியதும் பின் தொடருவோம்!
அன்று பிற்பகலில் ஜான்ஸனின் கிடங்கில்-
HALOUIN
இங்கே இருந்து கண்காணிப்போம்! யாரும் நம்மைக் கண்டுக்க மாட்டாங்க!
ஹூம்- ஆண்ட்ரு ஜீப்பைக் கொண்டு போயிருக்கான். ஜான்ஸன் கார்லே கிளம்பினா நம்ம திட்டம் அம்பேலாகி விடும்!
உஷ்ஷ்- அதோ வர்றான்!



நல்ல வேளை- நடந்தே போறான்! வா அவனை பின்தொடர்வோம்!
அதே சமயம் மாலோனும் வெளிக் கிளம்பினான்.
மர்லோன்! கார் பார்க்கை நோக்கி போறான்! நான் ஜீப்பை எடுத்து வந்தது புத்திசாலித்தனமான காரியம்!
இதே வேகத்தில் போனான்னா பிரச்சனை இல்லை!
அன்று மாலை கிளினிக்கில்-
இந்த நிமிடம் வரை வித்தியாசமா எதுவும் நடக்கலை இன்ஸ்பெக்டர். அப்படி ஏதாச்சும் நடந்தா உடனே உங்களுக்கு சிக்னல் கொடுக்கிறோம்!
கவனமாக இருங்க!
அதே கணத்தில் வின்செண்டின் அறையில்-


சாலையின் எதிர்புறம்-
ஏற்கனவே உள்ளே புகுந்து மறைஞ்சிட்டானே- அவனை பார்வையிலிருந்து தப்ப விடக் கூடாது!
ஜன்னல் பாதி திறந்திருப்பது என்னோட அதிர்ஷ்டம்!
லிப்ட் மேலே போயிருந்தது. வேகமாக படிக்கட்டில் ஏறி ஓடினான் ஆண்ட்ரு.


மூணாவது மாடியிலே லிப்ட்டை தடை பண்ணி வச்சிருக்கான் அந்த கயவன். கையிலே எந்த ஆயுதமும் எடுத்து வரலியே- அவனை எப்படி தாக்குவது?
ரொம்ப ஜாக்கிரதையாக நான் நடந்துக்கணும்?
எந்தக் கதவையும் திறக்க சாவி என்கிட்ட இருக்கு!
வெரி குட்! இங்கேயிருந்து கச்சிதமா அடிச்சிடலாம்!


பின்பக்கம் மராமத்து வேலை நடக்கிறது என்னோட அதிர்ஷ்டம்தான். இல்லேன்னு அந்த ஆளோடப் பார்வையிலே படாம கிட்டே நெருங்க முடியாம போயிருக்கும்!
இங்கேர்ந்து லைகஸா பின்னால் போய் அதிரடியா அமுக்கிடலாம்!
சுடாதே!


அடச்சே! 'ஸ்கவுட்' பொடி-யன்! காரியத்தையே கெடுத்தான்!
இனி கொஞ்ச நேரத்திற்கு இவன் தொல்லை இருக்காது! சீக்கிரமாக நான் வந்த காரியத்தை முடிச்சுட்டு பிறகு பயலை கவனிக்கணும்!


அம்மா- அடியா இது-
இடி மாதிரி- ம்ம்-
டுமீல்
டுமீல்
வெற்றி- வெற்றி- இனி வின்-
செண்ட் எதையும் உளறித்
தொலைக்க மாட்டான்!
ஐயோ- கோட்டை
விட்டு விட்டேனே!


கொலைகாரா! அவனைக் கொன்றுவிட்டாயே! ஆனால் நீ என்னிடமிருந்து தப்பவே முடியாது!
அடப்போடா பொடிப்பயலே- நீயெல்லாம் ஒரு பிஸ்தா!
இதற்கிடையே கிளினிக்கில்-
இன்ஸ்பெக்டர்- நீங்களும் கேட்டீர்களல்லவா?
வெளியிலிருந்து அவனை குறி வெச்சிருக்காங்க!
ஆ!
மூன்று தோட்டாக்கள் துளைத்துக் கொண்டு போயிருக்கின்றன. சாலைக்கு எதிர்ப் பக்கமிருந்து சுட்டிருக்கிறார்கள்!
இந்தப் பகுதியை சுற்றி வளைக்க வேண்டும்!



இந்தா இதை வாங்கிட்டு ஒதுங்கு அப்பால்!
விலகிக் கிட்டேன்!
மாலோன். அப்படியே அங்கே நில். இல்லையேல் நான் உன்னை சுட வேண்டியிருக்கும்!
இம்முறை தப்பு நடக்காது!
நாங்க வர்ற வரைக்கும் இவனை தேக்கி நிறுத்தி வச்ச உனக்கு நன்றி தம்பி!
அனு வின்செண்ட்டை காப்பாற்ற முடியாம.


குறி வைக்கிறதிலே நீ சமர்த்தன்னு காட்டிட்டே மாலோன்! நீ அனுப்பிய மூன்று தோட்டாக்களும் கச்சிதமா இலக்கில் தாக்கியிருக்கின்றன-ஆனு-நீ சுட்டது வின்செண்ட்டை அல்ல!
வின்செண்ட்டை இல்லையா? பின்னே?
ஆமாம்! படுக்கையில் தலையணைகளை பரப்பி போர்வையினாலே மூடி வச்சிருந்தோம்!
அப்படியா?
பிரமாதம்-இன்ஸ்பெக்டர்ஸார்! என்ன ஒரு அடையாள தந்திரம்!
ஆமாம்-எங்களுக்கும் சில வேளைகளில் நல்ல யுக்திகள் தோன்றும்! எனக்கு மாலோன் மீது சந்தேகமே எழவில்லை! குற்றவாளியை பிடிக்க சூழ்ச்சி வலை விரிச்சிருந்தோம்!
வின்செண்ட்டுக்கு தன்னை தாக்கிய நபர் யாரென்று தெரியும் என்று பேப்பரில் செய்தி வரச்செய்தோம்-மூன்றுவது சகாவை வலையில் விழச் செய்யும் தந்திரமாக!
சூப்பர் ஐடியா-இன்ஸ்பெக்டர்!



உண்மையை ஒத்துக்கொள் மாலோன்-கிடங்கிலிருந்த பெட்டகத்தை ராபர்ட்டின் துணையோடு உடைத்துத் திறந்து பணத்தை கொள்ளையடித்தது நீதானே?
ம்ம்- ரேஸ், சூதாட்டம் இவற்றில் எனக்கு கழுத்துக்கு மேல் கடன் ஏறிவிட்டது. அப்பா பணம் தரமாட்டார். எனவே, பெட்டகத்தில் அவ்வப்போது கைவச்சேன்!
விஷயம் ராபர்ட்டுக்குத் தெரியும். அவன் என்னை காட்டிக் கொடுத்து விடாமலிருக்க கொள்ளை நடந்து விட்டது போன்று ஒரு 'செட் அப்'பை அரங்கேற்ற நினைச்சேன் ஆனா விவகாரம் விபரீதமா திரும்பிட்டுது. வாட்ச்மேனைத் தாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது!
வாட்ச்மேன் 'பட்'னு போய்ச் சேர்ந்துட்டான்! பழியை சமீபத்தில் வேலைக்குச் சேர்ந்த மொர்ச் மீது போட்டு விடுவதென்று தீர்மானித்தோம்! பெட்டகத்திலிருந்து திருடியதில் கொஞ்சம் பணத்தை மொர்ச்சின் பாக்கெட்டில் ராபர்ட் வைத்து விட்டேன்!
ஓ-! ராபர்ட்! அவன் நம்மகிட்டேர்ந்து தப்பி தலைமறைவாகி விடக்கூடாது- அவனைப்பிடிக்க உடனே ஏதாவது பண்ணணும்!
கவலைப் படாதீங்க இன்ஸ்பெக்டர்! என் தோழர்கள் அவனை கண்காணிச்சுக்கிட்டிருக்காங்க!



பின்னர் போலீஸ் தலைமையகத்தில்-
ராபர்ட்! உன்னை நான் முழுக்க நம்பினேனே- இப்படி நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டியேடா பாவி!
மெர்ச்சின் பையினுள் திருடிய நோட்டுக்களை இரகசியமா போட்டு வச்சது தான்தான்னு ஒத்துக்கிட்டான் ராபர்ட்!
மார்லோன! நீயா இந்த மாதிரி காரியமெல்லாம் பண்ணினே-தூ!
என்னை மன்னிச்சிடுங்க டாடி! வின்செண்ட் என்னைக் காட்டிக் கொடுத்திட போறானேங்கிற வெறியிலே.
அவன் வாயை மூட இப்படி நடந்திட்டேன்!!
உன்னை மகன்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கு!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ.எண்: 374, சிவகாசி. போன்: 21159 & 20649. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123. வெளியீடு எண்: 71


விச்சு & கிச்சு
பலவித விளையாட்டுக் காரர்களுக்கு ஒரே சமயத்தில் நீ பயிற்சி அளிக்க முடியாது! குழப்பமாக முடியும்!
ஓடுதல்
தாண்டுதல்
பளு தூக்குதல்
எடை குறைத்தல்
நானா? ஒவ்வொரு அறையிலும் அவர்களை வைத்து, அவ்வப்போது தக்க ஆலோசனைகள் கூறுகிறேன்!
என் ஜான், சுறுசுறுப்பாக இல்லை!
உடனே அனுப்புங்கள்! பிரமாதமாக ரேஸ் ஓடச் செய்கிறேன்!
பளு தூக்கவா, இந்தப் பக்கம்!
உடல் குறையவா? இந்தப் பக்கம் வாருங்கள்!
ஹை-ஜம்ப்! இந்தப் ஸ்பிரிங் பலகையில் பயிற்சி பெறு! கொஞ்ச நேரத்தில் வந்துவிடுகிறேன்!
ஜான், இங்கே காத்திருக்கிறான்!
கவலைப்படாதீங்க, நான் பார்த்துக் கொள்கிறேன்!




அடடா! பயங்கர வேட்டை நாய்!
லொள்!
அடச் சனியனே! என் உடம்பையே என்னால் தூக்க முடியவில்லை இதில் நீ வேறு!
வழி விடு!
இப்படித்தான் ஒவ்வொருவருக்கும் தக்க ஆலோசனை சொல்கிறாயா?



லயன் காமிக்ஸ்
தீபாவளி மலர் வருகிறது!
உங்கள் அபிமான கதாநாயகன்.
மீண்டும் ஸ்பைடர்!
அக்டோபரில் வருகிறது!


அடுத்த வெளியீடு !
மின்னல் மனிதன்!
லயன்
காமிக்ஸ்
ரூ 2·50


லயன் காமிக்ஸ்
மீண்டும் ஸ்பைடர்!
ரூ. 2-50
விரைவில் வருகிறது!

ரூ.5000 பரிசு!

Registered No: TN/VR/29



விபரங்கள் உள்ளே!